**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No. : C. C. No. 13/2024**

**Prosecution Witness : P. W. 14**

| | | | |
|---|---|---|---|
| Name | : வள்ளி | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 29/01/2026

Accused Absent.

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது ஆவடி மத்திய குற்றபிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2023 ம் ஆண்டு நான் செங்குன்றம் போக்குவரத்து புலனாய்வு பிரிவில் ஆய்வாளராக பணி புரிந்த போது 25.01.2023 ம் தேதி மதியம் 14.50 மணியளவில் ஜி என் டி சாலை செங்குன்றம் பேருந்து நிலையம் எதிரே நடந்த சாலை வாகன விபத்து சம்மந்தமாக அப்போது பணியிலிருந்த உதவி ஆய்வாளர் திரு.வெங்கடேசன் என்பவர் செங்குன்றம் போக்குவரத்து புலனாய்வு பிரிவு குற்ற எண்.53/2023 ச/பி.279, 338 இதச படி வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வந்த நிலையில் சாலை விபத்தில் காயமடைந்த லலிதா பெண் வ-73 க/பெ.ரங்கன் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக ஸ்டான்லி மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் பேரில் வழக்கின் சட்டப்பிரிவை 279, 338 இதச விலிருந்து 279, 304(A) இதச வாக பிரிவு மாற்றம் **சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** செய்யப்பட்டு நான் விசாரணைக்கு எடுத்து கொண்டு விசாரணை செய்து விபத்து

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

நடந்த இடம் பற்றியும், விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவமனையில் சிகிச்சையளித்த மருத்துவர் யுவராணி உதவி மருத்துவ பேராசிரியர் அவர்களிடம் அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்து விசாரணை செய்து பதிவு செய்தேன். மருத்துவமனையில் இறந்தவரை சவக்கிடங்கில் பஞ்சாயத்தார் முன்னிலையில் புலன் விசாரணை செய்ய வேண்டி பஞ்சாயத்தாரராகிய தமிழ்செல்வன் மற்றும் உடனிருந்தவர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பதிவு செய்தேன். பின்பு HC 20778 ஜெயபிரகாஷ் என்பவர் மூலம் பிரேத பரிசோதனை பரிந்துரை கடிதத்தினை 26.01.2023 ம் தேதி மதியம் 12.30 மணிக்கு அனுப்பி டாக்டர் கோபால கிருஷ்ணன் Assistant Professor என்பவர் 26.01.2023 ம் தேதி மதியம் 02.05 மணிக்கு பிரேத பரிசோதனை செய்து இறந்தவர் காயங்களை குறிப்பெடுத்து Death is due to Hemomagrage shock as result of multiple injuries sustained என அறிக்கை பதிவு செய்தேன். பின்பு சாலை வாகன விபத்து ஏற்பட காரணமான வாகன எண். AP 27 Z 0215 பதிவு எண் கொண்ட ஆந்திர மாநில அரசு பேருந்து ஓட்டுநர் வேலு கொண்டையா வ/48 த/பெ.போலையா என்பவரை 30.01.2023 ம் தேதி காலை 10.00 மணிக்கு சேக் அப்துல் காவல் நிலையத்தில் ஆஜர் செய்ய அவரை விசாரைணைக்கு பின் கைது செய்து தக்க ஜாமீனில் விடுவித்தேன். மேலும் கருப்பையா வாகன ஆய்வாளர் 30.01.2023 அன்று விபத்து ஏற்படுத்திய வாகனத்தை வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்து அறிக்கை பெற்றேன். மற்ற சாட்சிகளை விசாரணை செய்து இறுதி அறிக்கை தயார் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

விபத்து பதிவேட்டில் தெரியாத பஸ் (Unknown Bus) என்று உள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபர் லலிதா முதலுதவி சிகிச்சைக்கு சென்ற போது சுயநினைவுடன் இருந்தார் என்று விபத்து பதிவேட்டில் காணப்படுகிறது என்றால்

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA

சரிதான். அந்த விபத்து பதிவேட்டில் பயணம் செய்த பேருந்து விபத்து ஏற்பட்டு அதால் காயம் ஏற்பட்டது என்று அதில் இல்லை என்றால் சரிதான். எதிரி அன்றைய தினத்தில் தன்னுடைய பணியில் இருந்தார் என்று அவருடைய போக்குவரத்து நிறுவனத்தில் இருந்து ஆவணம் பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த பேருந்து மோதியது என்று அடையாளம் தெரியாமலேயே புகார்தாரர் கொடுத்த புகாரில் நான் சரிவர விசாரிக்காமல் எதிரி மீது தவறான விவரங்களுடன் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA